அன்புடையீர்!

# ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி தேவி மலேசியா வருகை அன்புப் பயணம்

உலகத்தாரால் அம்மா என்று அழைக்கப்படும் மாதா அமிர்தானந்தமயி தேவி அவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 28ம் நாள் 2010 அன்று மலேசியாவிற்கு வருகை புரிகிறார் என்பதை அறிவிப்பதில் மலேசியா அமிர்தேஸ்வரி அறவாரியம் பெரும் உவகை கொள்கின்றது.

அம்மா எண்ணிலடங்கா பல மனித நலச் சேவைகளை ஊக்குவித்து நடத்தி வருகிறார். இவர் முற்றிலும் மாறுபட்ட ஆன்மீக தலைவர் என்பதை உலக ஐக்கிய சபை அங்கீகரித்துள்ளது. 30 ஆண்டுகளுக்கு மேலாக அம்மா தம் வாழ்க்கையைத் துன்பப்படும் மக்களின் நலனுக்காகவே அர்ப்பணித்து வருகிறார். அம்மாவின் நற்பணி இயக்கங்கள் பல பொதுநலச் சேவைகளை வழங்கி வருகின்றன. அவை, இருப்பிடம் இல்லாதவர்களுக்கு வீடு கட்டி கொடுத்தல், கல்வி உதவி வழங்குதல், பண உதவி வழங்குதல், பசியால் வாடுவோர்க்கு உணவு வழங்குதல், தனித்து வாழும் தாய்மார்களுக்கு முன்னேற்றப் பணி, எய்ட்ஸ் நோயாளிகளுக்கு மீட்புப்பணி, உடல் மற்றும் உள வளர்ச்சி குன்றியோருக்கு ஆதரவுப் பணி போன்றவையாகும். இப்பணிகள் மதம், இனம் மற்றும் நாடு ஆகிய அனைத்து எல்லைகளையும் கடந்து உலக முழுதும் நடந்தேறி வருகின்றன. மலேசியாவிலும் நடந்து வருகின்றது.

அம்மா 2008ஆம் ஆண்டு மலேசியாவிற்கு வந்தபோது, இரண்டு நாள்களில் 40 ஆயிரத்திற்கும் மேலானோர் அம்மாவைக் கண்டு ஆசி பெற்றுச் சென்றனர். கடந்த ஆண்டுகளைப் போல இவ்வாண்டும் மைன்ஸ் (M.I.N.E.S.) அரங்கத்தில் நடைபெறும் இந்நிகழ்வை மலேசியா அமிர்தேஸ்வரி அறவாரியமும், மலேசியா அமிர்தேஸ்வரி இயக்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இவ்வாண்டு அம்மாவின் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற நல்லுள்ளங்களின் நன்கொடையையும், நல்லாதரவையும் பெரிதும் எதிர்பார்க்கிறோம். வருகின்ற மக்கள் எவ்வித இடையூறுகளும் இல்லாமல் நல்ல சூழலில் அம்மாவின் அருளைப் பெற்றுச் செல்ல உங்களின் நன்கொடை பெருந்துணையாக அமையும்.

உங்கள் காசோலைகளை “Amriteswari Foundation of Malaysia” எனும் பெயரில் மேற்காணும் முகவரிக்கு அனுப்பலாம்; அல்லது Public Bank வங்கியில் 314 5870 534 எனும் சேமிப்பு பதிவில் போட்டுவிட்டு வங்கிச் சேமிப்பு சீட்டை மேற்காணும் முகவரிக்கு அனுப்பலாம். உங்கள் நன்கொடைக்கு வருமான வட்டி விலக்களிப்பு வரவுச் சீட்டு வழங்கப்படும்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் அம்மாவின் அருளும் அன்பும் கிடைத்திட எங்கள் பிரார்த்தனை உரித்தாகும். உங்கள் சேவையைப் பெரிதும் போற்றுகின்றோம்.

நன்றி.

இங்ஙனம்,
**டா.க. சுகுமாறன்**
மலேசியா அமிர்தேஸ்வரி அறவாரிய இயக்குனர்

PDF Created with deskPDF PDF Writer - Trial :: http://www.docudesk.com